**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OP | 229 | of | 2019 |

**2025-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் ம.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **சுபலட்சுமி** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-05.08.2025**

**ம.சா.-1**

**முதல் விசாரணை-**

நான் மனுவின் மனுதாரர். ஏற்கனவே எனது தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து இருக்கிறேன். எனது தரப்பில் 12 ஆவணங்கள் தாக்கல் செய்து இருக்கிறேன். தற்போது கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேலும் 6 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவை **ம.சா.ஆ.13 முதல் 18** ஆகும். மனுப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

குறுக்கு விசாரணை-

குழந்தையை பராமரிக்க வேண்டி மனுவை தாக்கல் செய்து இருக்கிறேன். என்னுடன் பிறந்தவர்கள் 2 சகோதரிகள். என் தகப்பனார் ஆண் வாரிசு இல்லாததால் 3

சகோதரிகளுக்கும் சொத்தை தான செட்டில்மண்ட் 2011ல் எழுதி வைத்தார். என் சகோதரி சாமுண்டீஸ்வரிக்கு எழுதி வைத்த தான செட்டில்மண்ட் பத்திரம் மட்டும் மனுவில் சொல்லியிருக்கிறேன். எனக்கும் என் இன்னொரு சகோதரி சுகன்யாவிற்கு எழுதி வைத்த செட்டில்மண்ட் பற்றி மனுவில் சொல்லவில்லை. 2011ல் 1000 சதுரடி மட்டும் என் தகப்பனார் அவருக்கு ஒதுக்கிக் கொண்டார். அந்த 1000 சதுரடியை 2018 ல் என் தகப்பனார் எனக்கு எழுதிக் கொடுத்துவிட்டார். என் சகோதரி சாமுண்டீஸ்வரிக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே ஜுன் மாதம் திருமணம் நடந்தது. தேதி மற்றும் வருடம் ஞாபகமில்லை. 02.04.2014 அன்று சாமுண்டீஸ்வரிக்கும் எதிர்மனுதாரருக்கும் லோக் சாய் ரஞ்ஜன் குழந்தை பிறந்தது. என் சகோதரி சாமுண்டீஸ்வரி அக்டோபர் மாதம் 2016ல் இறந்தார். சாமுண்டீஸ்வரி இறந்த பிறகு 2019 ல் என் தகப்பனார் சாமுண்டீஸ்வரிக்கு எழுதி வைத்த செட்டில்மண்ட் பத்திரத்தை ரத்து செய்தார். செட்டில்மண்ட் பத்திரங்களை என் தகப்பனார் எழுதிவைத்த போதே அவருக்கு life interest தக்க வைத்துக் கொண்டார். ஆகவே, அவர் காலத்திற்கு பிறகுதான் நாங்கள் சொத்தின் முழு உரிமையாளராக ஆக முடியும். என் தகப்பனார் எனக்கு செட்டில்மண்ட் எழுதி வைத்த சொத்தில் இருந்த கிடைத்த வாடகையை நான்தான் அனுபவித்து வந்தேன். என் தகப்பனார் வாடகையை வசூலித்து என்னிடம் கொடுப்பார். எனக்கு எழுதி வைத்த தான செட்டில்மண்ட் பத்திரத்தை என் தகப்பனார் ரத்து செய்யவில்லை. என் தங்கை சாமுண்டீஸ்வரிக்கு எழுதி வைத்த செட்டில்மண்ட்

பத்திரத்தை ரத்து செய்து ஏற்படுத்திய ஆவணத்தின் எண்ணோ, லோக் சாய் ரஞ்ஜன் பெயருக்கு ஏற்படுத்திய செட்டில்மண்ட் பத்திரத்தின் எண்ணோ எனக்கு தெரியாது. லோக் சாய் ரஞ்ஜன் பெயரில் ஏற்படுத்திய ஆவணத்தில் என் தகப்பனார் என்னை காப்பாளராக நியமித்துள்ளார். என்னை அவ்வாறு காப்பளாராக நியமிக்க என் தகப்பனார் நீதிமன்ற உத்தரவு எதுவும் பெறவில்லை. லோக் சாய் ரஞ்ஜன் பெயரில் உள்ள சொத்தில் எத்தனை வாடகைதாரர்கள் உள்ளனர் என்று எனக்கு தெரியாது. நான் சொத்தின் உள்ளே செல்ல எதிர்மனுதாரர் என்னை அனுமதிக்கவில்லை. ம.சா.ஆ.13 முதல் ம.சா.ஆ.18 வரை எனக்கு எழுதி வைக்கப்பட்ட செட்டில்மண்ட் சொத்தில் குடியிருக்கும் வாடகைதாரர்களுக்கும் எனக்கும் இடையே ஏற்பட்ட வழக்கு சம்மந்தப்பட்டவை ஆகும். லோக் சாய் ரஞ்ஜன் பெயரில் உள்ள சொத்தில் உள்ள வாடகைதாரர்கள் எதிர்மனுதாரருக்குதான் வாடகை செலுத்தி வருகின்றனர். லோக் சாய் ரஞ்ஜன் பெயரில் உள்ள சொத்தில் உள்ள ராஜேந்திரன், சத்யமூர்த்தி, ஆறுமுகம் ஆகிய மூவரும் என்னிடம்தான் மாத வாடகை செலுத்தி வருகிறார்கள் என்றால் அதை மறுக்கிறேன். மேற்படி மூவரும் என் தகப்பனார் எனக்கு கொடுத்த சொத்தில்தான் வாடகைதாரர்கள் இருந்து வருகிறார்கள். நான் ராஜேந்திரன், சத்யமூர்த்தி, ஆறுமுகம் ஆகிய மூவரும் லோக் சாய் ரஞ்ஜன் சொத்தில் குடியிருந்து என்னிடம் தான் மாத வாடகை செலுத்தி வருகிறார்கள் என்று நான் ஆலந்தூர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் சொன்னேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார்எனக்கு எழுதி வைத்த

1000 சதுரடி சொத்தப் பொறுத்து எதிர்மனுதாரர் பாகப்பிரிவினை கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த 1000 சதுரடி சொத்தில்தான் நான் குடியிருந்து வருகிறேன். அதனுடைய சர்வே எண் தெரியாது. கதவு எண் 18/77 ஆகும். ராஜேந்திரன், சத்யமூர்த்தி, ஆறுமுகம் ஆகிய மூவரும் கதவு எண் 69 கட்டிடத்தில் குடியிருக்கிறார்கள். என் தகப்பனார் எனக்கும் என் சகோதரிகளுக்கும் எழுதி வைத்த செட்டில்மண்ட் பத்திரங்களில் உள்ள சொத்துக்களின் விஸ்தீரணம் தலா சுமார் 5000 சதுரடி இருக்கும்.

வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu